**IN THE COURT OF SUBORDINATE JUDGE, ARAKKONAM.**
**OS.No. 138/2020**

| | | |
|---|---|---|
| **Deposition of Witness** | **:** | **PW-1** |
| பெயர் | : | வீரராகவன் |
| தந்தை பெயர் | : | குப்பன் |

Solemnly affirmed in accordance with the provisions of Section 6 of the Oaths Act, 1969 on 28.01.2026.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

தாவாவில் சொல்லியுள்ள சர்வே எண் தவறுதலாக தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்ற விவரத்தை நான் சொல்லவில்லை என்றால் சரயில்ல சொல்லியுள்ளேன். வழக்கில் நான் சொல்லவில்லை வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ-7 ஆவணமானது எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் நெல் போட்டதற்கான ஆவணம் ஆகும். வா.சா.ஆ-7 ஆவணத்தில் சர்வே நம்பரோ என் பெயரோ கொடுக்கப்பட்டிருக்கிறதா என்றால் என் அப்பாவின் பெயர் கொடுக்கப்பட்டுள்ளது. அதில் தேதி, வருடம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் 2020 மார்ச் மாதம் 7-ம் தேதி என போடப்பட்டுள்ளது.

என் தந்தை 30.06.2020-ல் காலமாகிவிட்டார். 2020-ற்கு பின்னிட்டு என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ-7 ஆவணத்தின் அடிப்படையில் நெல் விற்பனை செய்யப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 2000--ல் என் தகப்பானர் வாங்கியதற்கு பின்னிட்டு சர்வே நம்பர் மாறிய விவரம் என் தகப்பானருக்கு தெரியவந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என் தகப்பானருக்கு தெரியாது எனக்கு தான் தெரியவந்தது என்பதை நான் என் பிராதில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.

2000-ம் ஆண்டு முதல் இன்றைய தேதி வரை அந்த குறிப்பிட்ட சர்வே எண்ணில் விவசாயம் செய்துவந்தோம் என்பதை காட்டுவதற்கு என் பெயரிலோ என்

தந்தையார் பெயரிலோ சிட்டாவோ, அடங்கலோ பட்டாவோ உள்ளதா என்றால் இல்லை. என் அனுபவித்தில் இருக்கிறது என்பதை காட்டுவதற்கு கிராம நிர்வாக அதிகாரி ஏதேனும் சான்று வழக்கிற்கு முன்போ அல்லது பின்போ வழங்கியுள்ளாரா என்றால் இல்லை.

தாவா சொத்து முழுக்க முழுக்க பிரதிவாதியின் அனுபவித்தில் தான் இருக்கிறது நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது 1-ம் பிரதிவாதி கோவர்த்தினி என்பவர் 4-ம் பிரதிவாதி நந்தகுமாருக்கு செட்டில்மெண்ட் எழுதி வைத்து நடைமுறைக்கு வந்து அவரது அனுபவித்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. எனவே வா.சா.ஆ-3 செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் இந்த வழக்கில் எந்த வித பரிகாரமுமம் நான் கோர முடியாது என்று சொன்னால் சரியல்ல.

நானோ, எனது தகப்பனாரோ சர்வே நம்பர் தவறுதலாக இருப்பதற்கு பிழைத்திருத்தம் பத்திரம் தான் போடவேண்டும் என்றால் கேட்டதற்கு அவர்கள் செய்து கொடுக்கவில்லை. அதை பிழைத்திருத்தம் செய்ய வழக்கறிஞர் அறிவிப்பு ஏதேனும் அனுப்பினேனா என்றால் இல்லை.

என் தந்தை வாங்கிய 2000-ம் ஆண்டு ஆவணமானது காலவரையறை சட்டத்தின் படி அது நிலைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கில் பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த பரிகாரமும் கேட்க எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.

<u>குறுக்குவிசாரணை முடிவுற்றது.</u>